**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 மருதை –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) 1950ம் வருட கிரைய ஆவணம் பி.சா.ஆ.3 யாரால் வாங்கப்பட்டது என்றால், எனது தகப்பனார் வாங்கியது. மேற்படி ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. என்ன சர்வே எண் உள்ளது என்றால், சர்வே எண் 931/11 என கண்டுள்ளது. நான் சொல்வது போல சர்வே எண் எதுவும் பி.சா.ஆ.3ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்துக்களுக்கும் என் பேரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை, எனது தகப்பனார் பெயரில் உள்ளது. என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் சொல்வது போல பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.6 பட்டாவிற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.5 யார் பெயரில் உள்ளது என்றால் சாமுந்தன் அப்பா பெயரில் உள்ளது.

2) பி.சா.ஆ.5ல் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. பி.சா.ஆ.5 ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7 ல் கண்டுள்ள சங்கபிள்ளை யார் என்றால் எனது அக்கா மகன். பி.சா.ஆ.7ல் கண்டுள்ள சர்வே எண் என்னவென்றால் 936/8 ஆகும். சர்வே எண் 936/8 என்பது, சர்வே எண் 936/9ற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 936/9ஐ தான் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண் 936/8 க்கும், தாவா சொத்திற்கும், பி.சா.ஆ.7 ஆவணத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.7ல் நான்குபுற எல்லையில் கண்டுள்ள பொன்னன் நிலத்திற்கு மேற்கு

என்பதில் பொன்னன் என்பவர் வாதியின் கிரையதாரர் என்றால் சரிதான். பி.சா.ஆ.8 பொன்னம்பலம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அவர் எனது அக்கா மகன். அதன் சர்வே எண் 936/8 என்றால் சரிதான்.

3) பி.சா.ஆ.7 மற்றும் 8 இரண்டு ஆவணமும் என் பெயரில் இல்லை என்றால் நான்தான் எழுதிக் கொடுத்தேன். பி.சா.ஆ.7 மற்றும் 8 இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 மற்றும் 2 சென்னை உயர்நீதிமன்றத்தில் நான்தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 மற்றும் 2ல் கண்ட வழக்கிற்கும், வாதிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். 1, 2 வாதிகள் தாவா சொத்தை 2003ல் கிரயம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். வாதிகள் கிரயம் பெற்றதை தற்போது வரை ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இல்லை என்றும், அதனால்தான் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) வாதிகள் கிரயம் பெற்ற தேதி முதல் சுமார் 20 வருடத்திற்கும் மேலாக தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2022ம் வருடம் நான் தேவையில்லாமல் வாதிகளின் சுவாதீனத்தில் இடையூறு கொடுத்ததால்தான் இவ்வழக்கு தாக்கல் செய்ய நேரிட்டது என்றால் சரியல்ல. எனவே வாதிகள் கோரியபடி செலவுத் தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–2 வீரமலை –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரமலை | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ஆறுமுகம் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 60 |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பு சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| 1. | எனது ஆதார் அட்டை – அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்ட நகல் | பி.சா.ஆ.10 |

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**